
بسم الله الرحمن الرحيم




# Eid-Ul-Fitr Sermon

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**

**MUNIR AHMAD AZIM**

*16 June 2018*
*(01 Shawwal 1439 AH)*

## THE NIGHT OF EID – UL – FITR / ஈதுல் பித்தர் இரவு

### (Tamil version / தமிழ் பதிப்பு)

சலாம் மற்றும் ஈது நல்வாழ்த்துக்கள் கூறிய பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் ஈதுல் பித்தர் பேருரையினை ஆரம்பித்தார்.

ரமலான் நிறைவடையும் பொழுது நாம் ஈதுல் பித்தர் இரவினை பெறுகிறோம். அவ்விரவானது மக்களுக்கு அல்லாஹ் வெகுமதிகளை வழங்குகின்ற இரவாக அமைந்துள்ளது. ஈதுல்பித்தர் எனும் அத்திருநாளின் காலையில் அல்லாஹ் தனது வானதூதர்களை பூமியில் அனுப்புகின்றான். அவ் வானதூதர்கள தங்களது குறிப்பான பகுதியினை அடைந்துவிட்டால் மனிதர்கள் மற்றும் ஜின்களைத் தவிர மற்றனைத்து உயிரினங்களும் செவிசாய்க்கும் வகையில் உரத்த குரலில் இவ்வாறு அழைப்பு விடுக்கின்றனர்.

"முஹம்மதின் சமுதாயத்தினரே! நீங்கள் உங்களின் மனைகளிலிருந்து புறப்படுங்கள். உன்னதமான மற்றும் கருணையுள்ள உங்களின் இறைவனின்

அருகாமையில் சென்றுவிடுங்கள். அவன் உங்களுக்கு மிகவும் சிறந்த அற்புதமான வெகுமதிகளை வழங்குவான். உங்களுடைய கொடிய பாவங்களை மன்னித்துவிடுவான்.”

ஈதுத் தொழுகைக்காக மக்கள் பள்ளி வாசலை சென்றடையும் நேரம் அல்லாஹ் தன்னுடைய வானதூதர்களை நோக்கி “மிகவும் உற்சாகத்துடன் நோன்பு இருந்து சேவை புரிந்தவர்களுக்கான வெகுமதிகள் என்ன?” என்று கேட்பான்.

அந்நேரம் வானதூதர்கள், “இரட்சகனும் உன்னதனுமான எங்கள் இறைவா! அம்மக்கள் புரிந்த சேவைகளுக்கான வெகுமதிகளை அவர்கள் முழுமையான நிலையில் பெற வேண்டும். அது அவர்களின் உரிமைகளாகும்” என்று பதிலளித்தனர். அப்போது அல்லாஹ் தனது வானதூதர்களை நோக்கி “உங்களை சாட்சியாக கொண்டு நான் கூறுகிறேன், ரமலான் மாதத்தில் நோன்பு மற்றும் நடுநிசித்தொழுகையினை கடைப்பிடித்ததற்காக எனது திருப்தி என்னும் வெகுமதிகளை நான் அவர்களுக்கு வழங்குகிறேன். அத்துடன் நான் அவர்களுக்கு பாவமன்னிப்பையும் அளிக்கிறேன்.”

தனது அடியார்களை நோக்கி அல்லாஹ் கூறுக்றான். என் அடியார்களே, இப்பொழுது என்னிடத்தில் கேளுங்கள். நான் என் மகிமையினாலும் என் வல்லமையினாலும் ஆணையாக கூறுகின்றேன், இன்றைய தினம் உங்களின் இந்த கூடத்தில் (பள்ளி வாசல்) வைத்து இம்மைக்காகவோ அல்லது மறுமைக்காகவோ நீங்கள் என்னிடம் என்ன வேண்டுமானாலும் கேட்கலாம்; நான் அதை உங்களுக்கு வழங்கிகுபவனாகயிருக்கின்றேன்.

என் வல்லமை மீது ஆணையாக நான் கூறுகிறேன். என் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு நீங்கள் வாழும் காலம் வரையிலும் உங்களின் குற்றகுறைகளை நான் மறைத்து வைப்பேன். என் மகத்துவம் மற்றும் வல்லமை மீது ஆணையாக! குற்றவாளிகளின் மத்தியில் வைத்தும், நம்பிக்கை கொள்ளாமல் உண்மையை மறுப்போர்களின் மத்தியில் வைத்தும் நான் உங்களை இழிவுப்படுத்தமாட்டேன். இப்போது நீங்கள் இங்கிருந்து சென்றுவிடுங்கள். உங்களை நான் மன்னித்துவிட்டேன். நீங்கள் என்னிடம் மகிழ்ச்சியாகயிருங்கள். நான் உங்களில் மகிழ்ச்சியாக உள்ளேன்.

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் சமுதாயத்திற்கு ஈதுல்பித்தர் தினத்தில் மாபெரும் வெகுமதிகளை வழங்கியதற்கு சாட்சியாகயிருந்த அவ்வானதூதர்கள் மிகுந்த திருப்தி மற்றும் மகிழ்ச்சியினை அடைந்தனர். அந்நிலையில் அவர்கள், “எங்கள் இறைவா! இந்த அதிர்ஷ்டசாலிகளாகிய மக்களுடன் நீ எங்களையும் ஒன்றிணைத்துக் கொள்வாயாக!” ஆமீன் என்று பிராத்தனை செய்தனர்

இக்கதீஸிலிருந்து நமக்கு உணரயியலும் ஒரு காரியமாவது, ரமலான் மாதத்தில் கூட பொது மன்னிப்பை பெறாத மக்களும் இருக்கின்றனர் என்பதாகும். துரதிர்ஷ்டவான்களாகிய இத்தகைய மக்களுக்கு ஈதுல் பித்தர் தினத்தின் காலையில் கூட இறைமன்னிப்பின் எந்த ஓர் பங்கும் கிடைப்பதில்லை. இக்கூறப்படும் துரதிர்ஷ்டசாலிகள் என்பது தன்னைத்தானே நல்லவர்கள் என்று பெருமிதம் கொண்டோர்களும், தவறுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டோர்களும் மற்றும் இந்த அருள்மிக்க மாதத்திற்கு எவ்விதமான மதிப்பினையும் அளிக்காமலும் மட்டுமின்றி பாவங்களால் குவிந்த பாதைகள் வழியாக பயணம் மேற்கொண்டோர்களும் ஆவார்கள். அவர்கள் தங்களின் பெற்றோர்களுக்கு கட்டுப்படுகிறவர்களல்ல. இத்தகைய நெறிகெட்ட செயல்கள் மூலம் அவர்கள் தங்களது இறைவனிடமிருந்து விலகி சென்றார்கள். அந்நிலையில் அவர்களுக்கு எங்கு செல்ல முடியும்? இன்னொரு வகையில் கூறிக் கொள்வோமேயானால், இந்த அருளுக்குரிய மாதத்தினில் அருட்களை பெறாமலிருந்த அவர்களின் விதி என்னவாகியிருக்கும்?

அல்லாஹ், அவனுடையத் தூதர் மற்றும் வானவர்களுடைய சாபங்களுக்கு அவர்கள் ஆளாகுவதற்கு காரணமாவது, இவ்வுலக லாபங்கள் மற்றும் நன்மதிப்பினை பெறவேண்டும் என்ற எண்ணத்தோடும், உலகையே நோக்கமாக கொண்டும் அவர்கள் செயல்பட்டனர். இந்நோக்கமானது, உண்மையிலேயே நம் இதயத்தினை உடைத்து கொள்வதாகும். இதனால் அல்லாஹ்வின் மாபெரும் மன்னிப்பை பெறுவதிலிருந்து அவர்கள் தவறிவிட்டனர். உங்கள் எதிரிகள் மீது தற்காலிகமான ஒரு வெற்றியை அடைய உங்களுக்கு முடிந்திருக்கும். அதை போலவே பௌதீகமான நன்மதிப்பினையும் நீங்கள் பெற்றிருக்கலாம். ஆனால் அல்லாஹ், அவனுடைய தூதர் மற்றும் வானதூதர்களுடைய சாபத்திற்கு எதிராக எவ்விதமான பலனையும் உங்களுக்கு அளிப்பதற்கு இத்தகைய வெற்றிகளும் நன்மதிப்புகளும் ஒருபோதும் உதகாது என்பது உண்மையாகும். ஏனெனில் அல்லாஹ்வின் மன்னிப்பு மற்றும் கிருபையினை நீங்கள் பெறவில்லை. அதனை பெறுவதிலிருந்து நீங்கள் தவறிவிட்டீர்கள். இப்போது நீங்கள் எங்கிருந்தாலும், எந்த நிலையில் இருந்தாலும் உங்களுக்கான சண்டை மற்றும் மோதல்களை மறந்து விடுங்கள். மனம்திரும்புவதற்கான நேரம் இன்னும் இருக்கிறது. இன்றைய தினத்திலிருந்து நீங்கள் மனந்திரும்பி, நேர்மையாக முன்செல்லுங்கள். நாளை நீங்கள் ஒரு நீதிபதியின் முன்பாக நிற்கவேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அன்றைய நாள் உங்கள் பதவி, உங்கள் கௌரவம், உங்கள் வேலை, உங்கள் செல்வம் மற்றும் உங்கள் சொத்து வகைகள் போன்றவைகளால் உங்களுக்கு எந்த பயனும் இருக்காது. நீதிமானாகிய ஒரு நியாயாதிபதியின் முன் நாளை நீங்கள் நிற்பீர்கள். உங்கள் நற்செயல்கள் மட்டுமே அந்நாளினில் அங்கு கணக்கிடப்படும். அதைப்பற்றி நன்கு அறிந்தவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமாகயிருக்கிறான். உங்களுடைய ஒவ்வொரு அசைவு மற்றும் நோக்கங்களை அவன் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். அத்துடன் நம் அனைத்து தரப்பட்ட தவறுகளையும் மன்னிப்பதற்கான ஆற்றல் அவனுக்கு

மட்டுமே உரியது, ஆனால் அவன் நம்மை மன்னிக்கமாட்டான். அதாவது நாம் நம்முடைய உறவினர்களிடமும் மற்றும் சகமனிதர்களிடமும் வரம்புமீறி செயல்பட்டதற்கான தண்டனையை வழங்காமல் அவன் நம்மை மன்னிக்க மாட்டான்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள். **“ஒருவருக்கு மீட்கமுடியாத அளவிற்கு கடன் வருவது எவ்வாறு என்றால், அதாவது உயிர்த்தெழுதலின் நாளினில் தனது நற்செயல்கள் என்னும் பிரார்த்தனைகள் உபவாசங்கள் மற்றும் தானதர்மங்கள் ஆகியவற்றுடன் இறைசன்னிதியில் ஒருவர் வருகை தருவார். ஆனால் அந்நபர் சகமனிதர்களை அவமானிக்கவும் அவர்களுக்கு எதிராக அவதூறுகள் கூறியவருமாக இருப்பார். துன்புறுத்தல்களுக்கு ஆளாகியவர் அந்நாளில் அல்லாஹ்விடம் புகார் அளிப்பார். இத்தகைய துன்புறுத்தல்களுக்கு ஆளாகிய ஒவ்வொரு மனிதர்களுக்கும் அவர்களை துன்புறுத்திய நபரின் நன்மைகளை பறித்து வழங்கப்படும். அந்த நியாயத் தீர்ப்பு நாளில் நீதியை நிலைநாட்டுவதற்கு முன்பு அவரின் நற்செயல்கள் அனைத்தும் காலியாகிவிட்டால் அந்நிலையில் துன்புறுத்தல்களுக்கு ஆளாகிய அந்நபர்களின் பாவங்களை துன்புறுத்தியவர்களுக்கு மேலும் வழங்கப்படும். அதைத் தொடர்ந்து நரக நெருப்பில் அவர்களை தூக்கி வீசப்படும்” (முஸ்லீம்)**

எனவே நாம் புரிந்துக்கொள்ள வேண்டும், நாம் நிறைய நன்மைகள் செய்பவர்களாக இருந்தாலும் கூட மறுமையில் மிகப்பெரிய விரக்தியில் வீழ்வதற்கான வாய்ப்பும் உள்ளன. நான் முதலில் கூறிய கதீஸில் ஒரு மகிழ்ச்சியான செய்தியினையும் காணலாம். அல்லாஹ் அக்கதீஸில் **“தீயமக்களின் மத்தியில் வைத்தோ, அவநம்பிக்கையாளர்களின் நடுவில் வைத்தோ என் நேர்மையான அடியார்களை ஒருபோதும் இழிவுபடுத்த மாட்டேன்”** என்று கூறியிருக்கிறான். **அவன் நம் பாவங்களை மறைத்து, மற்றவர்களிடம் காட்டாதபடி வைத்துக் கொள்கின்றான் என்பது தனது இரக்கத்தைத் தேடிக்கொள்பவர்களிடம் அவன் காட்டும் மிகுந்த இரக்கமல்லவா?**

அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அவர்கள் விவரிக்கின்றார். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், **“உயிர்த்தெழுதலின் நாள் அன்று இறைவன் தனது நேர்மையான அடியாரின் அருகில் வந்து, அவரை மன்னித்து, அவரது பாவங்களின் மீது திரையிட்டு, அதனை மறைத்துக் கொள்வான். பின்னர் அல்லாஹ் அவரிடம் கேட்பான். நீ செய்த இத்தகைய பாவங்களைக் குறித்து உனக்கு தெரியுமா? அந்நேரம் அவர் பதிலளிப்பார் ‘ஆம்’ என் இறைவா! எனக்குத் தெரியும். மேலும் அல்லாஹ் அவரிடம் கேட்பான். நீ புரிந்த இவ்வகைப்பட்ட குற்றங்களைப் பற்றி உனக்கு ஞாபகம் இருக்கிறதா? “ஆம்” என அவர் பதிலளிப்பார். தனது பாவங்கள் மற்றும் தவறுகளை ஒப்புக் கொள்ளும் வரையில் அவருடனான அந்த உரையாடலினை அல்லாஹ் தொடர்ந்துக் கொண்டிருப்பான். அந்நிலையில் நான் இத்துடன் அழிந்துவிட்டேன்**

**என்று அவர் எண்ணுவார். அப்பொழுது அல்லாஹ் அவரிடம் கூறுவான். இம்மையில் நீ புரிந்த இத்தகைய பாவங்களை நான் மறைத்து வைத்தேன், இன்று உன் பாவங்களை நான் மன்னிக்கிறேன். பின்னர் அவர் புரிந்த நற்செயல்களைக் கொண்ட பதிவு புத்தகம் அவருக்கு வழங்கப்படும்.**
(புகாரி, முஸ்லீம், இப்னுமாஜ)

அல்லாஹ்வின் இன்பம் மற்றும் திருப்தியினை தேடுபவர்களுக்கு அவன் மன்னிப்பை அளிப்பவனாகயிருக்கின்றான் என்று பல்வேறு ஹதீஸுகளில் காணலாம். ஆகவே பிறமக்கள் செய்யும் தவறுகளுக்கு நாம் அவர்களை தாக்குவதிலிருந்து விலகி நிற்கவேண்டும். இக்காரியத்தில் நாம் மிகவும் கவனமாயிருக்க வேண்டும், ஏனெனில் அது மூலமாக நாம்தான் உண்மையில் இழப்பிற்கு ஆளாகிவிடுவோம். ஏனெனில் நாம் அவர்களுக்கு எதிராக அவதூறுகள் மற்றும் தீய வார்த்தைகளை கொட்டவும் செய்வோம். அது நமக்கு இழப்பாகும். மிகவும் சிறந்த முறையில் செயல்படுவதற்கு விரும்புகிறவர்கள், அல்லாஹ்வின் திருப்தியினை அடைவதற்கு தங்களுடைய வழிமுறைகளை கண்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு செயல்படுவதன் மூலம் அல்லாஹ் அவர்களின் தவறுகளை மறைத்து, அவர்களுக்கு மன்னிப்பையும் வழங்குவான். அவதூறுகள் ஆக்கிரமித்தல்கள், வாதாடல்கள், பொறாமைகள், வெறுப்புணர்வுகள் மற்றும் தீயவார்த்தைகள் ஆகியவற்றின் மூலம் நாம் நமக்கே அழிவினை ஏற்படுத்திக் கொள்கிறோம்.

ஈதின் இரவு என்பது தகுந்த பிரதிபலன் நமக்கு வழங்கப்படும் இரவாகும். ஈதின் இரவு என நான் கூறுவது, ஈதின் சந்திரன் நமக்கு காட்சி தரும் இரவாகும். அதாவது ஷவ்வால் ஒன்று! அவ்விரவில் சந்திரன் நமக்கு காட்சியளிப்பதுடன் ரமலான் மாதம் நிறைவுபெறுகிறது. அல்லது ரமலான் 29-ம் இரவில் சந்திரன் நமக்கு காட்சியளிப்பதில்லை என்றால், இந்த வருடத்தைப் போன்றே ரமலானின் 30 நாட்களும் முடிந்தப் பிறகு வரும் இரவில் அதாவது ரமலான் 30-திற்கு பிறகு சூரியன் மறைந்த பின்னர் நாம் ஷவ்வால் மாதத்தில் நுழைகிறோம். அந்நாளில் அதாவது ஷவ்வால் ஒன்றாம் தேதி நாம் ஈதுல்பித்தர் கொண்டாட வேண்டும். எனவே இந்த இரவுக்கு மிகுந்த மதிப்பை அளிப்பவர்களுக்கு அல்லாஹ் வெகுமதிகளை வழங்குகிறான்.

பெரும்பான்மையான முஸ்லீம் மக்களையும் சோர்வடைந்தவர்களாக காண்கிறோம். அவர்கள் ரமலான் மாதத்தில் சந்திக்க நேர்ந்த சோர்வை பற்றிய விழிப்புணர்வை பெறுகின்றனர் என சுருக்கம். ஈதுத்திருநாளின் அறிக்கை வந்து விட்டால் திடீரென அவர்கள் ஓய்வு என்ற எண்ணத்துடன் படுக்கையை நோக்கி செல்கின்றனர். ஈதுத்திருநாளின் அறிக்கையைப் பெற்றுக் கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை அடைகின்ற வேறு சிலர், அடுத்த நாளுக்கான உணவு வகைகள் தயார் செய்யும் பணிகளில் ஈடுபட்டுகொள்கின்றனர். அதாவது கேக் பிரியாணி போன்றவைகள்! வேறுசிலராகட்டும் துணிமணிகள் வாங்கும் வேலைகளில்

மூழ்குகின்றனர். உண்மையில் ஈதுத்திருநாள் இரவு என்பது நாம் இறைவழிபாடுகள் மற்றும் இறைவணக்கத்தில் மூழ்கவேண்டிய இரவாகும்.

அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறினார்கள். **இரண்டு பெருநாள் தினத்திற்கும் முன்புள்ள இரவுகளில் அல்லாஹ்வின் திருப்தியை நாடியவாறு எவர் ஒருவர் பிரார்த்தனைகளில் மூழ்கியிருக்கின்றாரோ அவரின் இதயம் இறப்பதில்லை, பிற இதயங்கள் இறக்கிறது. (இப்னுமாஜ)**

இச்செய்தியின் பொருள் மற்றும் கருத்தினை உணர்ந்துக் கொள்வதற்கான தௌபீக் அல்லாஹ் நமக்கு வழங்கட்டும். அதற்காக பிரார்த்தனைச் செய்வோம். அதைப்போன்றே நமக்குள் நாமே ஒரு திருத்தத்தை ஏற்படுத்திக்கொள்ளும் அதிர்ஷ்டத்தை வழங்கிட நம் இரட்சகன் நமக்கு அருள் புரியட்டும். பாவமன்னிப்பினை கோரி மனந்திரும்புவதற்கான ஒரு வாய்ப்பையும் அவன் நமக்கு வழங்கட்டும்! ஆமீன், சும்ம ஆமீன்!

எங்கள் இறைவா! நீ எங்களை அரவணைத்துக் கொள்வாயாக! எங்களுக்கு நேர்மையான வழியை காட்டுவாயாக! அவ்வாறேயானால் உன் கருணையினை பெறாதவர்களின் வகுப்பில் நாங்கள் உட்படாமல் இருப்போமல்லவா! எங்கள் இறைவா! உன் திருப்தியினைப் பெற்று, எங்கள் தூய நோக்கங்களை மேலும் தொடர்வதற்கு எங்களுக்கு நீ உதவிபுரிவாயாக.

உங்கள் அனைவருக்கும் ஈதுல்பித்தர் நல்வாழ்த்துகள். உங்களின் வாழ்நாளின் ஒவ்வொரு நாளினையும் அல்லாஹ் முபாரக்காக மாற்றுவானாக! உங்களின் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு நேரமும் இறை சேவை செய்வதறகான முயற்சிகளில் நீங்கள் மூழ்கியிருங்கள். ஏதேனும் வகையில் நீங்கள் மானிட குலத்திற்கு தொண்டு செய்யுங்கள். அது மூலம் உலகிற்கு அமைதியை அழைத்துவர முடிந்துவிடும். மட்டுமன்றி அது மூலமாக இறை ஒளி இறங்கிவிடும். இறை மகிமை நிரூபணமாகிவிடும். அந்நிலையில் மனித குலம் ஒரு உடம்பு ஒரு ஆன்மா போன்று மாறிவிடட்டும். இன்ஷா அல்லாஹ். ஆமீன்.






Translated by

*Azim Ahmad*

**Email:** azimahmad070@gmail.com

**Ph :** 7339689239




**ISSUED BY :**

**R. JAMALUDDIN RAOTHER**

*Amir Kerala South Zone, India*

Jamaat Ul sahih Al Islam

**Email :** jamal.raother@gmail.com

**Phone :** 9447001832,04752252663

**Blog:** www.sahih-al-islam.blogspot.in